*18*

# சிலுவையுடன் தொடர்புடைய விஷயங்கள்

## எபேசியர் 5:21–32

*"... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் ..." (எபேசியர் 5:25, 26).*

தேவன் பாவிகளைச் சிலுவையில் மாத்திரமே சந்திக்கிறார். இருப்பினும், தேவனுடைய ஆசீர்வாதங்கள் - நம்முடைய நிபந்தனைகளில் அல்ல ஆனால் - தேவனுடைய நிபந்தனைகளிலேயே பெறப்படுகின்றன. நாம் நமது இருதயங்களின் மையத்தில் சிலுவையை நடவேண்டும், பின்பு தேவன் தமது இரட்சிப்பின் நடுவில் நம்மை நடுகிறார்.

சிலுவை மையமானதாக உள்ளது; அதனுடன் தொடர்புடைய விஷயங்கள் பிரதானமானதாக உள்ளன. நீங்கள் ஒரு ஆடை வாங்குவதற்குப் பணம் செலவிட்டால், அந்த ஆடையை அணிவதில்தான் அந்தப்பணத்தினால் ஏற்படும் நன்மை வருகிறது. மருந்துகள் குணமாக்க முடியும், ஆனால் அதை நீங்கள் எடுத்துக்கொள்ளும்போது மாத்திரமே அவைகள் அதைச் செய்ய முடியும். புட்டிகளில் விட்டுவைக்கப்பட்டுள்ள மருந்து பயனற்றதாக உள்ளது. பவுல், "... கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, [அல்லது அதன் வல்லமையை இழந்துபோகாதபடிக்கு] சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 1:17). வல்லமை அங்குள்ளது, ஆனால் நாம் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

### புதிய ஏற்பாடு

இயேசு, "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கை [ஏற்பாட்டு]க்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 26:28). வேதாகமம் என்பது இரத்தம் பற்றிய புத்தகமாக உள்ளது. "இரத்தம்" என்ற வார்த்தை [வேதாகமத்தில்] நானூறுக்கும் மேற்பட்ட முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் இரத்தத்துடன் இணைவுகொண்டிருப்பதில் மிகவும் மேட்டிமையாய் இருக்கிறோமா? அது மிகவும் சிக்கலானதாக உள்ளதா? ஏவப்படாத

மனிதர்கள் வேதாகமத்தை எழுதியிருந்தால், அதை அவர்கள் சூரிய ஒளியைக் கொண்டு மூடியிருப்பார்கள்; [ஆனால்] அதை எழுதிய தேவன், அதை இரத்தத்தினால் கறைப்படுத்தினார்.

கிறிஸ்துவின் சிலுவையானது தோல்வியாக இருந்தது என்றும் அவரது உயிர்த்தெழுதல் வெற்றியாக இருந்தது என்றும் பலர் நினைக்கின்றனர். [ஆனால்] புதிய ஏற்பாடு, அவரது *மரணத்தையே* வெற்றி என்று வெளிப் படுத்துகிறது. எபிரெயர் 9:15, 16ம் வசனங்கள், இயேசுவைப் புதிய உடன் படிக்கையின் அல்லது புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தர் என்பதாகச் சித்தரிக் கிறது. ஒரு உடன்படிக்கை (அல்லது) உயில் என்பது [அதை எழுதியவரின்] மரணத்திற்குப் பின்புதான் அமுலுக்கு வருகிறது. இயேசு தமது மரணத்தின் மூலம், சாத்தானிடம் இருந்த மரணத்தின்மீதான அதிகாரத்தை எடுத்தார். உயிர்த்தெழுதலானது மரணத்திற்கு மதிப்பளிக்கிறது! இயேசு சிலுவையில் வெற்றிசிறந்தார். பவுல், "... அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்" என்று கூறினார் (கொலோசெயர் 2:14, 15).

இயேசு, வேதவசனங்களுக்குத் திறவுகோலாக இருக்கிறார். ஒவ்வொரு வசனத்திலும் இயேசு மறைமுகமாகக் குறிப்பிடப்படுவதை நீங்கள் கண்டறிய முடியும். "ஜீவ வார்த்தை," என்பதை "எழுதப்பட்ட வார்த்தையில்" தான் கண்டறியப்பட முடியும்.

நாம் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருப்போமாக, என்றென் றைக்குமாக! அதிகாரத்துவம் என்பதே விஷயமாக/பிரச்சனையாக உள்ளது: நாம் வேதாகமத்தின்படி செல்வோமா அல்லது இல்லையா? நாம் கிறிஸ்துவின் சபையினுடைய உறுப்பினர்களாக மாத்திரம் இருப்போம் ... இதைவிட வேறெதுவும் அதிகமாக இல்லை, குறைவாகவும் இல்லை. முதல் நூற்றாண்டு சபையின் உறுப்பினராக இருந்திருக்க நீங்கள் விரும்புவீர்களா? உங்களால் அது முடியும்! நீங்கள் தேவனுடைய வசனத்தைப் பின்பற்றினால், அவர் உங்களை அதில் சேர்ப்பார்.

## புதிய ஏற்பாட்டு சபை

சுவிசேஷப் புத்தகங்கள் இயேசுவின்மீது கவனம் குவிக்கின்றன; நடபடி களின் புத்தகத்தில் இருந்து வெளிப்படுத்தின சுவிசேஷம் வரையிலான புத்தகங்கள் அவரது சபையின்மீது கவனம் குவிக்கின்றன. இயேசு தமது சபையைக் கட்டுவதாகப் பேதுருவுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மத்தேயு 16:13-20). அவர் தமது சொந்த இரத்தத்தைக் கிரயம் கொடுத்து சபையை விலைகொண்டார் (நடபடிகள் 20:28). அவர் சபையின்மீது அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 5:22-30). ஒரு கணவர் தமது மனைவியின்மீது அன்புகூரவேண்டியிருப்பது போன்று, இயேசு சபையின்மீது அன்புகூர்ந்து, காலங்களின் முடிவில் அதை ஒரு மகிமையுள்ள சபையாகத் தமக்குமுன் நிலைநிறுத்திக்கொள்வதற்காக

அவர் தம்மையே ஒப்புக்கொடுத்தார் (வசனங்கள் 25-27). அவரது இரத்தத்தின் பலன்கள் அவரது சபையின்மூலமாகவும் அவரது சபையினாலும் வருகின்றன.

நீங்கள் கிறிஸ்துவை அவரது சபையினின்று பிரிக்க இயலாது. கிறிஸ்துவின் பௌதீக சரீரம் அவரது ஆவிக்குரிய சரீரமாகிய சபையைக் கிரயம் கொண்டது. சபையானது "என்றென்றைக்கும் தேவனுடைய குடும்ப"மாக உள்ளது. பூமியில் உள்ள வேறு எதுவும் அதைப்போன்றதாக இருப்பது இல்லை. உள்ளூர் சபையானது சரியானதைச் செய்கிறபோது, அதைப்போன்று பூமியில் உள்ள வேறு எதுவும் செய்ய இயலாது. பூமியில் இயேசு தமது சபையை மாத்திரமே விட்டுச் சென்றார். அவர் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட நிறுவனங்களுக்காக மரிக்கவில்லை. கிறிஸ்து, தமது சபையாகிய சரீரத்திற்கு எல்லாவற்றிற்கும் மேலான தலையாக இருக்கிறார் (எபேசியர் 1:22, 23; கொலோசெயர் 1:18) ஒருமைப்பாடு மற்றும் சமத்துவம் ஆகியவற்றை தேவனுடைய சபையில் மாத்திரமே காண இயலும். இயேசு [பிரிவினையாகிய நடு] சுவற்றைத் தகர்த்து, தமது சிலுவையினால் இருதிறத்தாரையும் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2:13-22). சபை ஒன்றே தவிர பலவாக இருப்பதில்லை.

"ஆனால் சபை உங்களை இரட்சிக்க இயலாதே" என்று நீங்கள் கூறலாம். இது உண்மையே! கிறிஸ்துவே இரட்சகராக இருக்கிறார் - சபை என்பது இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டமாக உள்ளது. இரட்சிக்கப்பட்டவர்கள் சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டனர் (நடபடிகள் 2:41-47). நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால், நீங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறீர்கள்; நீங்கள் சேர்க்கப்பட்டிருந்தால், நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். தேவன் மறப்பதில்லை. <u>சபைக்குப் புறம்பே இரட்சிக்கப்பட்ட மக்கள் இருப்பதில்லை.</u> நீங்கள் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கும்போது, நீங்கள் சபையைப் பெறுகிறீர்கள். சபையானது உலகளாவியதாக உள்ளது, ஆனால் அதன் உள்ளூர்க் குழுமத்தில் செயல்துடிப்புள்ள உறுப்பினராக இருத்தல் என்பது மாத்திரமே கிறிஸ்துவின் சபையினுடைய அங்கமாக வாழ ஒரே வழியாகும். உள்ளூர் சபை மாத்திரமே பூமியில் நிலையான, பாதுகாப்பான இடமாக உள்ளது.

சிலர், "நான் ஒருங்கிணைக்கப்பட்ட மதத்திற்கு எதிராக இருக்கிறேன்!" என்று கூறுகின்றனர். அப்படியானால் அவர்கள் "ஒருங்கிணைக்கப்படாத மதத்திற்கு" சார்பாக இருக்கின்றனரா? மேலும் நான், "கிறிஸ்துவை நான் நேசிக்கிறேன், ஆனால் சபையை நான் புறக்கணிக்கிறேன்" என்று கூறப்படுவதையும் கேட்டிருக்கிறேன். இது வசனரீதியானதாகவோ அல்லது நியாயமானதாகவோ இருப்பதில்லை. திருமணம் முடித்தவர்களின் மாபெரும் சந்தோஷம் அவர்களின் மனைவிகளே. அவர்கள் தங்களைக் குறித்ததான பாராட்டுரைகளைக் காட்டிலும் தங்கள் மனைவிகளைக் குறித்ததான பாராட்டுரைகளைக் கேட்பதற்கே அதிகம் விரும்புவார்கள். அவர்களில் சிலர் வாய்மொழியாகத் தங்களை தற்காத்துக்கொள்ள மாட்டார்கள் - ஆனால் அவர்கள் தங்கள் மனைவியரை எவரொருவரும் மனம் புண்படச் செய்யவோ அல்லது எதிராகப் பேசவோ அனுமதிக்க மாட்டார்கள்!

*கிறிஸ்துவின் மணவாட்டியான அவரது சபையை மனம்புண்படச் செய்துள்ள நிலையில் தேவனுக்கு முன்பாக நிற்பதை யார் விரும்புவார்? காலங்களின் முடிவில் கிறிஸ்து, சபையை "கறைதிரை முதலான ஒன்றும் இல்லாமல்" மகிமையுள்ள சபையாகத் தமக்கு முன்பாக நிலைநிறுத்திக் கொள்வார் (எபேசியர் 5:27).*

## கர்த்தருடைய நாள், கர்த்தருடைய இராப்போஜனம்

*கர்த்தருடைய இராப்போஜனம் சிலுவையுடன் தொடர்புடையதாக உள்ளது. தொடக்ககால சபையானது, ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும், அதாவது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் தவறாது கூடிவந்தது (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:1, 2; நடபடிகள் 2:42; எபிரெயர் 10:25ஐக் காணவும்). அந்தக்கூடுகையில் கர்த்தருடைய இராப்போஜனம் பரிமாறப்பட்டது. கிறிஸ்தவர்கள் அதில் தனியாகப் பங்கேற்று பின்பு கூடிவரவில்லை. கூடிவராத சபையானது உயிர்வாழ இயலாது. சமூகம் என்ற வகையில் சபையானது தன்னிலேயே ஜீவன் கொண்டதாக உள்ளது (நடபடிகள் 2:42).*

*சபை கூடிவருகிறபோது, கிறிஸ்து அங்கிருக்கிறார்! இயேசு விருந்தாளியாக அல்ல, ஆனால் விருந்தளிப்பவராக இருக்கிறார்! கர்த்தருடைய இராப்போஜனம் என்பது நம்மை மன்னிக்கிறதான சபையின் திருவருட் சாதனமாக இருப்பதில்லை - அது நாம் மன்னிக்கப்பட்டு இருக்கிறோம் என்று அறிவிக்கிறதான ஒரு நினைவுச்சின்னமாக உள்ளது. இயேசு ஒரே ஒரு கட்டளையை மாத்திரமே கொடுத்துள்ளார்: "என்னைப் பின்பற்றி வா." அவர் ஒரே ஒரு வேண்டுகோளை மாத்திரமே விடுத்துள்ளார்: "என்னை நினைவுகூருங்கள்" (லூக்கா 22:19, 20; 1 கொரிந்தியர் 10:16; 11:23-26). அவர் ஒரே வேதாகமத்தையும், ஒரே அப்பத்தையும், ஒரே பாத்திரத்தையும், ஒரே சரீரத்தையும், ஒரே இரத்தத்தையும், ஒரே உடன்படிக்கையையும் கொண்டுள்ளார். இங்கு ஒரு நல்ல விதியுள்ளது: கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் கர்த்தருடைய இராப்போஜனம், மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம் இல்லாத கர்த்தருடைய நாள் ஒன்றுமில்லை! அதில் என்ன பயன்படுத்தப்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்: புளிப்பில்லாத அப்பமும் திராட்சரசமும். இந்தச் சின்னங்கள் அவரது சரீரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அப்பம் மற்றும் பாத்திரம் [திராட்சரசம்] ஆகியவற்றிற்குப் பதிலாக வேறு எதையேனும் பயன்படுத்துதல் என்பது நினைத்துப்பார்க்க இயலாததாக இருக்கும்.*

*சபையானது மதரீதியான பரிசுத்த நாட்களின் மீதல்ல, ஆனால் கர்த்தருடைய இராப்போஜனத்தின்மீதே வளருகிறதாக உள்ளது! இவ்விடத்தில் தவறுதல் என்பது சபையை பலவீனப்படுத்தி வியாதிப்படுத்துதலாக உள்ளது (1 கொரிந்தியர் 11:23-30). கர்த்தருடைய இராப்போஜனம் என்பது பூமியில் மாபெரும் நினைவுச் சின்னமாக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் அதில் பங்கேற்க முடியும். வசனம், சிலுவை மற்றும் அவரது மன்னிப்பு*

*ஆகியவற்றின்மீது கவனம் குவிக்கப்படுகிறது! உறுப்பினர்கள் தங்களைத் தாங்களே சோதித்தறிகின்றனர். உறுப்பினர்கள் "கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தை அறிக்கையிடுகின்றனர்" (1 கொரிந்தியர் 11:26). இதனால்தான் நாம், வீடுகளில் இருந்து வர இயலாதவர்களுக்குக் கர்த்த ருடைய இராப்போஜனத்தை எடுத்துச் செல்லுகிறோம். அவர்களும்கூட சரீரத்தின் உறுப்புகளாக உள்ளனர். கர்த்தருடைய இராப்போஜனம் என்பது சபை பவனி சுற்றி வருகிற ஒரு நினைவு சின்னமாக உள்ளது!*

## ஞானஸ்நானம்

*சிலுவையானது சபைக் கட்டிடத்தின் கோபுரத்தில் மாத்திரமல்ல, ஆனால் சமுதாயத்தின் மையத்தில் மீண்டும் வைக்கப்பட வேண்டும். இயேசு ஒரு பேராலயத்தில், இரு மெழுகுவர்த்திகளுக்கு இடையில் சிலுவையில் அறையப்படவில்லை, ஆனால் அவர் ஒரு சிலுவையில் இரு கள்வர்களுக்கு மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார். நாம் யாவரும் "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியை எழுப்பி அதற்கு பதில் அளித்தாக வேண்டும். சிலர், லூக்கா 18:9-14ன் அடிப்படையில், "பாவிகளின் ஜெபம்" என்ற ஒன்றை ஆலோசனையாகக் கூறியுள்ளனர், அவ்விடத்தில் வரிவசூலிக்கும் ஆயக்காரர் ஒருவர், "தேவனே, பாவியாகிய என்மீது இரக்கமாயிரும்" என்று ஜெபித்தார். இதை இரட்சிப்பிற்கு ஒரு வழியாக அளித்தல் என்பது, நாம் வசனத்தைப் படிக்கத் தவறியதை அல்லது நாம் வசனத்தை ஏற்றுக்கொள்ளத் தவறியதை அல்லது இரண்டையுமே வெளிப்படுத்துகிறது. இந்த வரலாற்றில், பரிசேயரும் ஆயக்காரரும் ஆகிய இருவருமே தேவாலயத்தில் சகோதரர்களாக இருந்தனர். இவ்விருவரில் எவருமே முதன்முறையாகத் தேவனிடத்திற்கு வந்த பாவியாக இருக்கவில்லை. ஒருவர் மேட்டிமையுள்ளவராக இருந்தார்; மற்றவர் மனம் வருந்தியவராக இருந்தார். இதுதான் பாடமாக உள்ளது. சிலுவை, நடபடிகளின் புத்தகம், பிரதான கட்டளை, பெந்தெகொஸ்தே நாள், சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல், சபை ஆகியவற்றிற்கு முன்னானவைகளாக இயேசுவின் இந்த உவமைகள், இருந்தன. இந்த நிகழ்ச்சி இரட்சிப்பைப் பற்றியதாக இருக்கவில்லை. இந்த வரலாற்றில் இயேசு அறியப்பட்டவராகவோ, தேவைப்பட்டவராகவோ அல்லது குறிப்பிடப்பட்டவராகவோ இருக்கவில்லை!*

*ஞானஸ்நானம், பாவிகளைச் சிலுவையுடன் தொடர்புபடுத்துகிறது. ரோமர் 6:3ஐ வாசியுங்கள். இந்த செயலில் நாம் இயேசுவின் இரத்தத்துடன் தொடர்புகொள்கிறோம்; பூமியின்மீது இவ்விடத்தில் மாத்திரமே கிறிஸ்தவ ரல்லாத ஒருவர் அதைச் செய்ய இயலும். ஆகையால், அது சபையின் அர்த்தமற்ற சடங்காச்சாரமாகக் குறைக்கப்பட்டு விடக்கூடாது.*

*இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றபின்பு, ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவர் என்ற கருத்து வேதவசனங்களுக்கு அந்நியமானதாக உள்ளது என்பதே உண்மையாகும். இது முதல் நூற்றாண்டின் சபை வரலாற் றிற்கும் அந்நியமானதாக உள்ளது. ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பில்*

ஒரு முக்கியமான நிகழ்வாக உள்ளது. இயேசு தமது பிரதான கட்டளையில் ஞானஸ்நானத்தை வைத்துள்ளார் (மாற்கு 16:15, 16). பாவிகள், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுகின்றனர் (மத்தேயு 28:18-20). கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் என்பவையே சுவிசேஷச் செய்தியின் மையப்பகுதியாக உள்ளன (1 கொரிந்தியர் 15:1-4); பாவிகள், அவரது மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகின்றனர் (ரோமர் 6:3-6; கொலோசெயர் 2:12). ஞானஸ்நானத்தில், ஒருவர் கர்த்தரை ஏற்றுக்கொண்டு அவரைத் தரித்துக்கொள்கிறார் (கலாத்தியர் 3:26-28). வசனரீதியான ஞானஸ்நானத்தில், பாவியொருவர் ஒரு கிறிஸ்தவராகிறார் (நடபடிகள் 2:38).

ஞானஸ்நானம் என்பது மனிதரின் தகுதியுடைய கிரியையல்ல, ஆனால் அது தேவனுடைய கிரியையாக உள்ளது. ஒவ்வொரு பாவியும், இயேசுவைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி அவரை அறிக்கையிட வேண்டும். இவற்றை எனக்காக எவரொருவரும் செய்ய இயலாது, ஆனால் யாரேனும் ஒருவர் என்னை ஞானஸ்நானத்தில் வழிநடத்த வேண்டியிருந்தது! நேரடி அர்த்தத்தில் கூறுவதென்றால், பாவிகள் "ஞானஸ்நானம் பெறுகின்றனர்." எபேசு நகரத்தில் பன்னிரெண்டு பேர் பெற்றிருந்த ஞானஸ்நானம் [கிறிஸ்துவின் யுகத்திற்கு] சரியற்றதாகையால், அவர்கள் பவுலினால் "மறு ஞானஸ்நானம் பெற்றனர்" (நடபடிகள் 19:1-7). ஞானஸ்நானம் முக்கியமானதென்றும் அது ஏற்ற வகையில் செய்யப்பட வேண்டும் என்றும் பவுல் நம்பினார்.

ஞானஸ்நானம் இரட்சிக்கிறது (1 பேதுரு 3:20, 21). பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்கள் ஞானஸ்நானம் பெறுதல் அவசியமாக இருந்தது (நடபடிகள் 2). எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெறுவதும் அவசியமாக இருந்தது (நடபடிகள் 8:26-40). பவுல்கூட ஞானஸ்நானம் பெறுவது அவசியமாக இருந்தது (நடபடிகள் 9; 22:16). புறஜாதியாரான (யூதரல்லாத ) கொர்நேலியு ஞானஸ்நானம் பெறுவது அவசியமாக இருந்தது (நடபடிகள் 10). இவ்வசனப்பகுதிகள் யாவற்றையும் படித்துவிட்டு கணக்கு ஒப்புவிக்க வேண்டிய மக்கள் யாவரும் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று முடிவெடுக்காதிருக்க யாரால் இயலும்?

## சிலுவையில் அறையப்பட்ட வாழ்வு

சிலுவையானது, சிலுவையில் அறையப்பட்ட வாழ்வை விளைவிக்கிறது. பவுல், "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் ..." என்று கூறினார் (கலாத்தியர் 2:20, 21). இயேசு மரணத்தை மரிப்பதற்கு முன்னர், அவர் வாழ்வை வாழ்ந்தார். இரட்சிப்பு இலவசமானது, ஆனால் அது நமக்குள்ள ஒவ்வொன்றையும் - நமது வாழ்வையும் - விலையாகக் கொண்டுள்ளது! வரலாற்றுரீதியான கருத்தமைவில், இயேசு உயிர்த்தெழுந்தவராக இருக்கிறார்; ஆனால் பரிசுத்தமான கருத்தமைவில், அவர் இன்னமும் சிலுவையில்

இருக்கிறார். சபையானது சிலுவையின் மூலமாகவே இருப்பிற்குக் கொண்டு வரப்பட்டு சிலுவையின் வெளிப்பாடாகவே வாழ்கிறது. கொலோசெயர் 3:1-4ல் பவுல் விவரித்தபடி, நாம் சிலுவையினிடத்திற்கு வந்து சிலுவையில் வாழ்கிறோம்.

சிலுவையில் அறையப்பட்ட இரட்சகர், சிலுவையில் அறையப்பட்ட ஊழியர்களாலேயே மிகச்சிறந்த வகையில் எடுத்துரைக்கப்பட முடியும். இயேசு நம்மை மரிப்பதற்கென்று அழைக்கிறார். பவுல் அநுதினமும் மரித்தார் (1 கொரிந்தியர் 15:31). சபையானது மரிப்பதற்குத் தைரியம் கொண்டிருந்தால் மாத்திரமே, எவ்வாறு வாழ்வது என்பதை அது கற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்தவர்கள் இனியும், கிறிஸ்து இரட்சிக்க வந்த உலகத்தாரைப் போன்று இருக்கக்கூடாது, அவர்கள் உலகத்தை இரட்சிக்க வந்த கிறிஸ்துவைப் போன்றவர்களாக இருக்க வேண்டும். ஒருவர் வாழ்கின்ற விதம் என்ன என்பதே வேதாகமம் முழுவதும் கொண்டுள்ள *உண்மைக்* கருத்தாக உள்ளது. உங்கள் நாளின் முதற்பகுதியை, உங்கள் வாரத்தின் முதல் நாளை, உங்கள் ஊதியத்தின் முதல் பங்கை, உங்கள் இருதயத்தின் முதல் இடத்தைத் தேவனுக்குக் கொடுங்கள்.

விசுவாசத்துடன் கீழ்ப்படிதலை, இரத்தத்தின் புத்தகத்தை, இரத் தத்தைக் கிரயம்கொடுத்து வாங்கப்பட்ட சபையை, நினைவுகூரும் கர்த்தரு டைய இராப்போஜனத்தை, அல்லது ஞானஸ்நானத்தை நீங்கள் குறைத்து மதிப்பிடும்போது, உங்களைச் சிலுவையுடன் தொடர்புபடுத்த எதுவும் எஞ்சியிருப்பதில்லை.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*